**இராம கோபாலன்**

*நிறுவன அமைப்பாளர்*

**இந்து முன்னணி,** தமிழ்நாடு
59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676

9-8-2010

## இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர்
## இராம கோபாலன் அவர்களின் பத்திரிகை அறிக்கை!

## இந்து மாணவர்களுக்கும் சலுகை வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயம்!
## இந்து துரோகிகளையும், இந்து விரோதிகளையும் மக்களே இனம் கண்டுகொள்ளுங்கள்!

மதத்தின் பெயரால் மக்களைப் பிரிப்பது அரசாங்கம்தான். இந்து இயக்கங்கள் அல்ல! ஓட்டு வங்கி அரசியல் நடத்த முஸ்லீம், கிறிஸ்துவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வாரிவழங்கி ஆளும்கட்சியாகிய காங்கிரஸும், தி.மு.க.வும் இதனைச் செய்கின்றன!!.

இன்று மாணவர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் விழிப்படைந்து போராடத் துடிக்கின்றனர். கல்வி உதவித் தொகையைப் பொருளாதாரத்தில் முன்னேறிய முஸ்லீம், கிறிஸ்தவர்களுக்கு வாரி வழங்கும் மத்திய, மாநில அரசுகள்! சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினர் ஆகிய எஸ்.சி. எஸ்.டி.களுக்குப் பலவகை முட்டுக்கட்டைகளைப் போடுவது பச்சைத் துரோகம்!

சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் இந்துக்களுக்கு இடஒதுக்கீடு கொடுப்பது இல்லை! இதனை அரசியல்வாதிகளோ, அரசாங்கமோ தட்டிக்கேட்பதில்லை!

ஒசூரில் 7 கல்லூரிகளின் இந்து மாணவர்கள் சென்ற வாரம் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். வருகின்ற புதன்கிழமை கல்லூரி ஸ்டிரைக் செய்ய இருக்கிறார்கள். அதுபோல வருகின்ற ஒரிரு மாதங்களில் அனைத்து மாவட்டங்களிலும் இந்த எழுச்சியானது மாணவர்களிடையே வரலாறு காணாத அளவு ஏற்படப்போகிறது.

அரசாங்கம் இந்துக்களுக்கு இழைத்த அநீதிக்கு - பரிகாரம் தேடட்டும், மனம் மாறட்டும்!

மாவட்ட ஆட்சியராக இருந்த உமாசங்கர் இந்து எஸ்.சி. சலுகையை அனுபவித்த கிறிஸ்தவர் என்பதை உறுதி செய்த தமிழ்நாடு அரசு அவரைத் தற்காலிகப் பதவி நீக்கம் செய்துள்ளது. அரசின் இந்நடவடிக்கையைப் பாராட்டுகிறோம். இதனை எதிர்த்துப் போராட்டம் நடத்தும் மதத் தரகர்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்து எஸ்.சி. எஸ்.டி. சலுகையை மதம் மாறிய கிறிஸ்தவனுக்கு வழங்குவதை நியாயப்படுத்தும் இனத் துரோகிகளை மக்கள் இனம் கண்டு ஒதுக்க வேண்டும். கிறிஸ்தவர்களின் நிழல் உலக தாதாக்களாக இருந்து இனத்திற்குத் துரோகம் இழைக்கும் இவர்கள் தலித் என்று சொல்லிக் கொள்ளத் தகுதி அற்றவர்கள்.

இந்துக்களுக்குக் கல்வி உதவித் தொகையிலும், இடஒதுக்கீட்டின் சலுகைகளையும் பறிக்கத் துடிக்கும் அரசியல்வாதிகளின் உண்மை முகத்தை மக்கள் மெல்லமெல்ல அறிந்துவருகிறார்கள். இனி இவர்கள் பாட்சா பலிக்காது. பலரைச் சில நாள் ஏமாற்றலாம், சிலரைப் பல நாள் ஏமாற்றலாம், எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது எனும் மக்கள் சொல்வழக்குப்படி போலி மதச்சார்பற்ற அரசியல்வாதிகளின் தகிடுதத்தம் இனி பலிக்காது!

இந்துக்களுக்கும் உரிய கல்வி உதவித்தொகையை மத்திய, மாநில அரசுகள் உடனடியாக வழங்க வேண்டும்! இந்து எஸ்.சி., எஸ்.டி. சலுகையை மதம் மாறிய கிறிஸ்தவர்கள் அனுபவிப்பதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளை இந்து முன்னணி கேட்டுக்கொள்கிறது. இதனை வலியுறுத்தி வெற்றி பெறும் வரை ஓயாது ஒழியாது இந்து முன்னணி தொடர்ந்து போராடும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**

நிறுவன அமைப்பாளர்

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**